# வாக்கிய விருத்தி விசாரம்

(ஜீவ - ஈஸ்வர ஐக்கியம்)



ப்ரக்ருன்

# வாக்கிய விருத்தி

# விசாரம்

(ஜீவ – ஈஸ்வர ஐக்கியம்)

ஆசிரியர்

**ப்ராக்ஞன்**

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | வாக்கிய விருத்தி விசாரம். |
| **தெளிவுரை** | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| **வகை** | : | வேதாந்தம் |
| **முதற்பதிப்பு** | : | 2020 |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **பக்கங்கள்** | : | **35** |
| **விலை** | : | அக விழிப்பு |

# வாக்கிய விருத்தி விசாரம்

இந்த பூ உலகில் படைக்கப்பட்ட சீவர்களிலேயே ஒரு அறிவு தொடங்கி ஆறறிவு வரைப் பகுத்தறிவுப் பரிமாணத்தில் பயணம் செய்த வகையில், ஆறாம் அறிவுப் பரிமாணத்தில் வந்த மனிதர்கள் மட்டுமே நல்லது எது? கெட்டது எது? என்று பகுத்துப் பிரித்துப் புரிந்துக் கொள்ளக்கூடிய நிலையில் அறிவுப் பரிமாணத்தில் முன்னேறி இருக்கிறார்கள்.

அந்த வகையிலே, **சுகம், துக்கம்** என்ற இரண்டையும் கையாளும் விதம் என்பது, அவர்கள் கற்ற கல்வியின் வாயிலாகப் பெற்ற அனுபவம் தரும் பாடங்கள் என்பது, **கர்மகாண்டம்** நிலையற்ற சுகத்தை அடைவதற்கான வழிகளையும், **ஞானகாண்டம்** நிலையான சுகத்தை அடைவதற்கான வழிகளையும் உபதேசிப்பதை அவர்களால் உணர முடிகின்றது.

அதாவது, உலகம் கொடுக்கும் சுகங்கள் நிலையற்றவை. அதை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையில்கூட, அவைகளால் அவனுக்கு துயரம் வருவதையும் காண வேண்டியுள்ளது.

அதுவே, நிலையான சுகம் மட்டுமே வேண்டுமென்றால், அதை கொடுக்கக் கூடிய நிலையான வஸ்துவாக இருக்கின்ற பரமனை மட்டுமே நாட வேண்டும்.

அந்த பரமனை எப்படி நாட வேண்டும் என்பதை உபநிஷதங்கள் உபதேசிக்கிறது. **பரமன் யார்?** என்பதை தீர விசாரிக்கும்போது, **அது நானே** என்றுதான் உபநிஷத்தின் உயரிய உபதேசமாக அறியப்படுகிறது.

**நானே பரமன்** என்றால், அதை அடையவோ அல்லது தேடவோ வேண்டிய தேவையும் இல்லை. அதை உணர்ந்துக் கொண்டால் மட்டும் போதும். அவ்வாறு அதை உணர்வதற்கு **அறிவு மட்டும்தான்** அவசியம். அதைவிடுத்து, அனாவசியமான செயல்கள் பல செய்வதினாலே, அதை ஒரு நாளும் அனுபவமாக உணர முடியாது. எனவே இதிலிருந்து பரமன் என்றவொன்று அடைய வேண்டிய பொருளும் அல்ல, தேடி அலைய வேண்டிய பொருளும் அல்ல என்று புரிந்துக் கொள்ள முடியும்.

ஆனால், **நானே பரமன்** என்று ஏற்றுக் கொள்ள சற்று கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஏனென்றால், என்னுடைய அனுபவத்தில் நான் துக்கம் உடையவனாகவும், கால, தேச வரையறையுக்குள் கட்டுப்பட்டவனாகவும் இருப்பதைக் காணும்

போது, அந்த பரமனோ எதனாலும் வரையறுக்கப்படாததாகவும், பூரணமாகவும், ஆனந்த ஸ்வரூபமாகவும் இருக்கிறது.

எனவே, இதைப் பற்றி என்னுள்ளே மனதினால் விசாரம் செய்து பார்க்கும்போது மட்டும்தான் உறுதியான ஒரு முடிவுக்கு என்னால் வரமுடியும். இதற்கு ஒரே வழி வேதத்தின் உயரிய விசயங்களை உள்ளடக்கிய உபநிஷதங்கள் மட்டும்தான் நமக்கு உதவி செய்யவும் முடியும். இதுவே மகாவாக்கிய விசாரம் என்று மகான்கள் கூறுவர்.

அதாவது, தன் கழுத்தில் அணிந்துக் கொண்டுள்ள மணிமாலை தொலைந்துவிட்டதாக கருதும் ஒருவன் அதை தன் கழுத்தில் அணிந்திருப்பதை மறந்துவிட்டு, மற்ற இடங்களில் தேடிக் கொண்டிருப்பது எப்படி ஒரு அறியாமையோ? அப்படித்தான் அந்த தூய அறிவாகிய பரமனாக நான் இருந்துக் கொண்டு, என்னை எனக்கு வேறாக எங்கெல்லாமோ தேடி அலைந்துக் கொண்டிருக்கின்றேன் என்பதை எளிதாக எடுத்துக்கூறும் மகாவாக்கிய விசாரத்தின் மூலம், இந்த உபநிஷதங்கள் நம்மை வழி நடத்திச் செல்கின்றன.

நன்றி,

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**

# வாக்கிய விருத்தி விசாரம்

## கடவுள் வாழ்த்து

படைத்தல், காத்தல், அழித்தல் என்கின்ற மூன்று சக்திகளையுடைய ஈஸ்வரனுக்கு நமஸ்காரம். மாயையுடன் கூடியவராகவும், ஜகத்திற்கு தலைவராகவும், அனைத்தையும் அறியும் சக்தியுள்ளவராகவும், நாம–ரூபங்களாக காட்சியளித்துக் கொண்டு இருப்பவராகவும், பந்தங்களற்றவராகவும், ஆனந்தக் கடலாகவும் இருப்பவரும், மகாலட்சுமிக்கு கணவராக இருப்பவரும், குறைவற்ற எல்லா ஐஸ்வர்யங்களையும் உடையவரும், சைதன்ய ஸ்வரூபமாகவும் இருக்கின்ற ஈஸ்வரனுக்கு நமஸ்காரம்.

## குரு வணக்கம்

யாருடைய உபதேசத்தினால் நானே பரமன் என்ற அறிவையும், இந்த உலகில் படைக்கப்பட்டவைகள் அனைத்தும் என்னிடத்தில்தான் ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறது என்ற அறிவையும் அடைந்து இருக்கின்றேனோ? அந்த குருவுக்கு நமஸ்காரம்.

மேலும் என்னை ஆத்ம ஸ்வரூபமாகவும், இருத்தல் ஸ்வரூபமாகவும் எப்பொழுதும் அறிய வைத்தாரோ? அந்த குருவினுடைய பாத கமலங்களை எப்போதும் தியானித்து வணங்குகின்றேன்.

## <u>முமுக்சு</u>

பிறப்பு – இறப்பு எனும் பவசாகரம் எனும் மிகப்பெரிய பிறவிப் பெருங்கடலை நீந்தி கரை சேரும் தோனியாக (படகாக) அந்த ஈஸ்வரனே சத்குருவாக வந்து, இங்கு சாஸ்திரத்தை உபதேசிக்கின்றார்.

யார் ஒருவனுக்கு மூன்றுவிதமான துயரங்களால் சூழப்பட்ட தடைகளை தகர்த்தெறிந்து, **சாதன சதுஷ்டயம்** எனும் நான்கு விதமான படி நிலைகளில், மிக உயரிய ஆன்மஞான உபதேசங்களடங்கிய பரமனைக் காட்டிக் கொடுக்கும் மாபெரும் பாடங்களாகிய பலவற்றிலும் அவனைப் பயணிக்க வைத்து, விவேகமும், வைராக்கியமும் அவனுக்கு உண்டாகும்படி, அனைத்து துயரங்களையும் கலைந்து, அந்த தூய அறிவாக பிரகாசித்துக் கொண்டு, எப்போதும் ஸ்ரோத்திரியனாகவும், பிரம்ம நிஷ்டனாகவும் இருக்கின்ற ஈஸ்வர சக்தியாக விளங்கும் சத்குருவை சரணடைந்து சந்தேகங்களாகப் பலக் கேள்விகளை கேட்பவன் எவனோ? அவனே முமுக்ஷு.

அவரது அத்தகைய அரிய பல அறிவுரைகளால், இந்த பிறவிப் பெருங்கடலைக் கடக்கும் சரியான சாதகன் எவனோ? அவனே, மோக்ஷத்தின்மீது இச்சையுள்ள முமுக்ஷு என்பதாக எல்லோராலும் அறியப்படுகின்றான்.

## மூன்று துயரங்கள்

மூன்று விதமான துயரங்களாவது, 1. **ஆதியாத்மிகம், 2. ஆதிபௌதிகம், 3. ஆதிதைவீகம்.**

1. **ஆதியாத்மிகம்** – ஸ்தூல, சூட்சும சரீர சம்பந்தமாக அடைகின்ற துயரங்கள். ஸ்தூல சரீர துயரங்களாவது வியாதி, வயோதிகம், மரணம் ஆகும். சூட்சும சரீர துயரங்களாவது மனிதில் உள்ள தீய குணத்தினால் அடையப்படுகின்றது. ஆசை, கோபம் போன்ற தீய குணங்களினால் அனுபவிக்கப்படுகின்ற துயரங்கள்.

2. **ஆதிபௌதிகம்** – சூழ்நிலைகளினால் அடைகின்ற துயரங்கள்.

3. **ஆதிதைவீகம்** – இயற்கையிலிருந்து அடைகின்ற துயரங்கள், அதிக மழை, அதிக வெப்பம், புயல் போன்றவைகள்.

குருபகவானே! "எதனால் இந்த சம்சாரம் என்கின்ற பந்தத்திலிருந்து நான்விடுபட முடியுமோ? அந்த வழியை எனக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் கருணைக் கூர்ந்து அன்போடு எனக்கு கூறுங்கள்" என்று வேண்டினான்.

## குரு – சிஷ்ய உரையாடல்

சீடனே! உன்னுடைய இந்த கேள்வி சரியானது என்று எனக்கு தோன்றுகிறது. அதற்கான பதிலை மிகத்தெளிவாக சொல்கிறேன். அதை மிகவும் நம்பிக்கையுடன், கவனத்துடன், மனவொருமுகப்பாட்டுடன் கேட்பாயாக.

பிறப்பு – **இறப்பு** எனும் சம்சார விடுதலைக்கு ஆத்ம ஞானம் ஒன்று மட்டும்தான் சாதனமாக இருக்கிறது. எந்த அறிவானது ஜீவ–ஈஸ்வர ஐக்கியத்தை புரிய வைக்கின்றதோ? அதுவே "**தத்–த்வம்–அஸி**" போன்ற மகாவாக்கியங்களிலிருந்து அடையப்படுகின்ற அறிவாகும். இதுதான் சம்சார விடுதலைக்கு சாதனமாகவும் இருக்கின்றது.

ஜீவாத்மா என்பது என்ன? என்றும், பரமாத்மா என்பவர் யார்? என்றும், இவர்கள் இருவரும் ஒன்றாக இருக்கும் தன்மை எவ்வாறு ஏற்படும்? என்றும், இதுப்போன்ற ஏராளமான சந்தேகங்களுக்கு, கேள்விகளுக்கு விடையாக "**தத்வமஸி**"

**(தத்+த்வம்+அஸி)** போன்ற வாக்கியங்கள் எப்படி சம்சார விடுதலைக்கு உதவியாக இருக்கும் என்ற ஞானத்தை அடைய வேண்டிய அரிய பல உண்மைகளை எடுத்துக் கூறும் உபதேசமே இந்த **வாக்கிய விருத்தி** விசாரம் ஆகும்.

இந்த தத்வமஸி என்ற வாக்கியம் எப்படி ஜீவ–ஈஸ்வர ஐக்கியத்தை போதிக்கிறது? போன்ற சில கேள்விகள் சீடனால் கேட்கப்பட்டது.

இந்த **வாக்கிய விருத்தி** விசாரம் இனி, சீடனால் கேட்கப்படுக் கேள்விகளுக்கு ஏற்றவாறு, குருவினால் எளிதாகப் புரிந்துக் கொள்ளும் விதமாக உபதேசிக்கப்படுகின்றது.

உண்மையை நாடும் உத்தம சிஷ்யனே! உன்னுடைய இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்கின்றோம். உன்னைத் தவிர, உனக்கு வேறாக ஜீவன் என்ற ஒருவன் இருக்கிறான் என்ற உன்னுடைய அறியாமையைப் போக்கும் அரிய அறிவுரைகளை கவனமுடன் கேட்பாயாக!

மகனே! நீயேதான் ஜீவனாகவும், **"நான் யார்?"** என்ற கேள்வி கேட்ட நீயேதான் பரமனாகவும் இருக்கிறாய். இதில் சந்தேகமே கிடையாது.

குருபகவானே! இப்போது கூட இந்த மகாவாக்கியத்தில் உள்ள சொற்களினுடைய அர்த்தமே என்னால் தெளிவாக புரிந்துக் கொள்ள முடியவில்லை. அப்படி இருக்கும் போது நான் பிரம்மனாக இருக்கிறேன் என்ற மகாவாக்கியத்தின் பொருளை எப்படி புரிந்துக் கொள்ள முடியும்? என்பதையும் சற்று தெளிவாக கூறுங்கள்.

மகனே! நீ கூறுவது சரிதான். வாக்கியத்தின் பொருளை புரிந்துக் கொள்ளும் விஷயத்தில் எந்தவொரு கருத்து வேறு பாடும் இருக்கக்கூடாது. ஒரு வாக்கியத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லினுடைய பொருளையும் சரியாகப் புரிந்து, அறிந்து வைத்திருப்பதுதான் அந்த வாக்கியத்தின் முழு பொருளையும் உணர்ந்துக் கொள்வதற்கு காரணமாக இருக்கிறது.

ஜீவாத்மா சாட்சியாக இருக்கின்ற சைதன்ய ஸ்வரூபம், அந்தக்கரணத்தையும் அதில் உருவாகின்ற எண்ணங்களையும் சாட்சியாக பார்த்துக் கொண்டிருக்கிறது. இதுவே, **த்வம் (நான்)** என்ற சொல்லின் இலட்சியார்த்தமாகும்.

இது பூர்ணமாகவும், எல்லையற்றதாகவும், ஆனந்த ஸ்வரூபமாகவும், அத்துடன் அனைத்தையும் அறியும் அறிவு ஸ்வரூபமாகவும் இருக்கின்றது.

எதனாலும் வரையறுக்கப்படாத இருத்தல் என்ற "**இருப்பு**" ஸ்வரூபமாகவும், சத்யமானதாகவும் இருக்கின்றது.

இப்படி இருக்கும் இருப்பு (சத்), எப்போதும் தன்னை அறியும் அறிவு (சித்) நிலையில், அனைத்தையும் பிரகாசிக்கும் உன் மனதின் மூலமாகத்தான் அறிபவனாக இருந்து, ஜீவாத்மா என தன்னைப் பாவித்துக் கொள்கின்றது.

எப்போதும் நிலையான ஆனந்த ஸ்வரூபமாகவும், அந்தக்கரணத்திற்கு சாட்சியாகவும் இருந்துக் கொண்டு, தன்னிருப்பைத் தானே அறியும் விதமாக எல்லாவற்றிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற தூய அறிவாகவும், அகண்ட ஞான ஸ்வரூபமாகவும் இருப்பதையே ஆத்மாவாகிய "**நான்**" என்பதாக, இடைவிடாமல் சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும்.

உடல், மனம் போன்ற அனாத்மாவில் இருக்கும் ஆத்ம புத்தியை அவசியம் துறக்க வேண்டும். ஸ்தூல, சூட்சும, காரண சரீரங்களில் உண்டாகும் "**நான்**" என்ற அபிமானத்தை விட்டுவிட வேண்டும்.

பரு உடல், சூக்கும உடல், காரண உடல் எனும் மூன்று சரீரங்களையும் நம்முடைய மூன்று அவஸ்தைகளாக **நனவு, கனவு,** மற்றும் **ஆழ் உறக்கம்** போன்ற அனுபவங்களில்

உண்டாகும் விசய, சுகங்களில் சிக்காமல், இந்த மூன்றையும் வெறும் சாக்ஷியாக மட்டுமே பார்க்கும் நம் உண்மை ஸ்வரூபத்தில், அதாவது, நம்முடைய தூய அறிவில் அப்படியே நிலைத்து நிற்கப் பழக வேண்டும்.

அவைகளை உண்மையாக பாவிக்கும் அறியாமை மனம் மூன்று சரீரங்களையும் பற்றிக் கொண்டு, அவைகளை விட மறுப்பதினால் உண்டாகும் அற்ப மனமாயை அவனை ஜீவனாகவும் பாவிக்க வைக்கின்றது.

அதாவது, அனாத்ம வியங்களான இவைகள் ஆத்மாவல்ல என்ற சாத்தியத்தை அடைவதற்கு, அவனது மனோ விகாரங்களில் உண்டாகும் உருவங்களில் பற்று இருப்பதே இதற்குக் காரணமாகிறது.

அதாவது, அவைகள் அவனால் அறியப்படும் பொருளாக இருக்கிறது. ஆத்மா மனம் எனும் ஊடகத்தின் வாயிலாக அறிபவனாக இருப்பதால், அவ்வாறு அறியப்படுபவைகள் அவனுக்கு வேறாகத் தெரிகின்றது.

அவ்வாறு, உருவத்தில் வந்து போகின்ற அனைத்தும், தோன்றி மறையக்கூடிய மாயை என்பதினால், நம்முடைய பரு உடலாகிய ஸ்தூல சரீரம் முதல் பார்க்கப்படுகின்ற அனைத்தும்

ஆத்மாவாக இருக்க முடியாது. காரணம், அதுவும் ஒரு நாள் இல்லாமல் போகின்றது.

அதாவது, களிமண்ணால் செய்யப்பட்ட பானைக்கு உருவமிருப்பதால், அது களிமண் அல்ல! என்று நாம் அறிந்துக் கொள்வதுப் போல, இந்த ஸ்தூல சரீரம் நானல்ல! என்று புரிந் கொள்ள வேண்டும்.

மேலும், இவ்வாறு, வந்து, போகின்ற ஸ்தூல உடல் மாற்றத்திற்குட்பட்டு இருப்பதாலும், அது நானல்ல. ஆகாசம் முதலிய ஸ்தூல பஞ்சபூதங்களினுடைய விகாரங்கள்தான் இந்த ஸ்தூல உடல்.

இது பானையுடன் ஒப்பிட்டு புரிந்துக் கொள்ளலாம்.

குருநாதா! உங்களால் விவரிக்கப்பட்ட சரியான, பொருத்தமான காரணத்தினால், இந்த ஸ்தூல உடல் அனாத்மா என்பதை என்னால் புரிந்துக் கொள்ள முடிகின்றது. மேலும், ஆத்ம தத்துவத்தை உள்ளங்கனி நெல்லிகனி போல, இன்னும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாக மீண்டும் உபதேசிக்க வேண்டும்.

மகனே! இந்த உடலை அனுபவிக்கின்றவனான நான் உடல் அல்ல! என்று உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

எவ்வாறு உன்னால் அனுபவிக்கப்படுகின்ற பானைக்கு வேறுபட்டவனாக நீ இருக்கின்றாயோ? அதுப்போல இதையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மனம் இந்த உடலில் உள்ள இந்திரியங்கள் வழியாக இந்த உலகத்தை அனுபவிக்கின்றது. எனவே, மனமும், உடலும் புலன்களை பயன்படுத்துவதால் அவைகள் நானல்ல.

அதாவது, அறிபவனாகிய மனம் அனுபவிக்கப்படும் உலகப் பொருள்களை இந்திரியங்கள் வாயிலாகப் படைத்துக் கொண்டு, அனுபவிப்பதினால், அவைகள் எதுவும் நானல்ல.

அதுப்போலவே, அந்தக்கரணங்களாகிய புத்தியையும், பிராணனையும் நம்மால் அனுபவிக்கப்படுவதால், அவைகளும் நானல்ல! என்று உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

மேலும், இவைகளின் (உடல், புலன்கள், அந்தக்கரணம்) சேர்க்கையும் நானல்ல! என்று உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

பார்க்கப்படும் பொருள்களுக்கு வேறுபட்டவனாக இருக்கின்ற பார்ப்பவனையும் (மனதையும்) அனுமானத்தினால் அறிவுப்பூர்வமாக புரிந்துக் கொள்ள வேண்டும், சரியாக உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

தேகம், புலன்கள் ஆகியவைகள் ஜடமான வஸ்துக்கள் என்றாலும், அவைகள் பல்வேறு செயல்களை செய்கின்ற திறனுடையதாக இருக்கிறது. இவைகளின் செயல்களை எடுத்துக் கொள்ளுதல், விட்டுவிடுதல் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். இந்த சைதன்யத்தின் இருப்பினால் அனுகிரகத்தால் இவைகள் செயல்பட முடிகிறது.

அவைகள் அத்தனைக்கும் அதிர்ஷ்டானமாக எப்போதும் இருப்பு கொண்டுள்ள அந்த **சாட்சி சைதன்யமே நான்** என்று உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

எந்தவிதமான மாற்றத்திற்கும் உட்படாமல், அப்படியே இருந்துக்கொண்டு, எதிலும் சம்பந்தப்படாமல், தன்னுடைய இருப்பினால், புத்தி, மனம் முதலியவைகளை செயல்பட வைத்துக் கொண்டு இருக்கிறது. அப்படிபட்ட தூய அறிவாகிய சாட்சி சைதன்யம் "**நான்**" என்று அறிந்து கொள்வாயாக.

உண்மையில் உணர்வுடையது போலத் தெரியும் இந்த தேகம், புலன்கள், மனம், பிராணன் ஆகியவைகள் அனைத்துமே ஜடமாகத்தான் இருக்கின்றது.

யாருடைய இருப்பினால் இவைகள் அனைத்தும் உணர்வுடையதாக இருப்பது போலத் தெரிகிறதோ? **"அதுவே நான்" என்று** நிச்சயம் செய்ய வேண்டும்.

அதாவது, ஏற்கனவே பார்த்ததுப் போல, எது எல்லாம் வந்து செல்கின்றதோ? அது நிலையாக இருப்பதைக் காட்டிலும் வேறானது என்பது நமக்குத் தெரியும் அல்லவா? அதுப்போல, என்னுடைய மனமானது எண்ணங்களால் வந்து போகின்றது என்றும், அவ்வாறே அந்த மனதின் ஆசா, பாசங்களால் இந்த பரு உடலும் உண்டாக்கப்பட்டு, இவ்வாறு வந்து, வந்து போகின்றது.

அதாவது, இந்த மனமும், உடலும் தோன்றி, மறைகின்ற நிலையில், **பிறப்பு – இறப்பு** சுழற்சியில் வந்து, வந்து போகின்றது என்ற இந்த நிலையையும் எது அறிகின்றதோ? அதுவே நானாக இருக்கின்றேன்! என்று உறுதியாகத் தெரிந்துக் கொள்வாயாக.

**விழிப்புநிலை, கனவுநிலை, ஆழ்நிலை உறக்கம்** ஆகிய மூன்றும் மனதுக்குள் வருகிறது. அதாவது விழிப்பு நிலையில் புத்தி செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையிலும், உறக்க

நிலையில் புத்தி செயல்படாத நிலையிலும், எந்தவொன்று இவைகளை மாற்றமடையாமல் நேரிடையாக அறிகின்றதோ? **"அதுவே நான்"** என்று தெரிந்துக் கொள்வாயாக.

அறிபவன் இரண்டுவிதமாக இருக்கிறது.

1. பிரமாதா, 2. சாட்சி

1. **பிரமாதா** – சேதனமான அந்தக்கரணம் மூலம் ஒன்றை அறிந்துக் கொண்டிருப்பவன். அறிவை அடைவதற்கு ஏதாவது ஒரு பிரமாணத்தை பயன்படுத்தியாக வேண்டும். உதாரணமாக, ஒரு பொருளின் நிறத்தை அறிவதற்கு கண் என்கின்ற பிரமாணத்தை, பயன்படுத்தி, அதன் வாயிலாக அறிவை அடைவது.

2. **சாட்சி** – நேரிடையாக பிரமாணம் இல்லாமல். அப்படியே விருத்திகளை, பாவம், அபாவங்களை பிரகாசப்படுத்துவது.

ஓட்டை இடப்பட்ட பானைக்குள் வைக்கப்பட்ட தீபமானது எவ்வாறு அந்த பானைக்குள் இருந்துக் கொண்டு, அந்தப் பானையின் ஓட்டைகளின் வாயிலாகப் பிரகாசித்துக்

கொண்டிருக்கிறதோ? அதுப்போல, இந்த தேகத்திற்கு வேறாக இருந்துக் கொண்டு, இந்த தேகத்தில் உள்ள புலன்களை எல்லாம் பிரகாசிப்பது சாட்சி சைதன்யம் என்பதை அறிய வேண்டும்.

பொதுவாக, நமக்கு வேறாகப் பார்த்து, நாம் ஆசைப்படும் அனைத்துப் பொருட்களிலும் ஆனந்தம் இருக்கின்றது. இந்த நியாயப்படி பார்க்கும்போது, நாம் நம்மையே அதிகமாக நேசிப்பதால், நாமே ஆனந்த ஸ்வரூபமாக இருக்கின்றோம். உண்மையில், அந்த ஆனந்தம் என்பதும் நம்முடைய சுபாவம்தான். நம்முடைய இயல்புதான். ஆனால், அது நம்முடைய அறியாமையினால் மறைக்கப்படுகின்றது.

நம்மை நேசிப்பதில் எந்தவிதமான நிபந்தனையும் கிடையாது. ஆனால், மற்றவற்றை நேசிப்பதில் நிபந்தனையுடன் கூடியதாக இருக்கிறது. நமக்கு அப்பாற்பட்டவற்றை அதிகம் விரும்புகிறேன் என்ற விஷயத்தில், தன்னுடைய சுயசொரூப சம்பந்தம் இருப்பதனால்தான் அவைகள் விரும்பப்படுகிறது.

நம்முடைய சம்பந்தம்தான் எல்லா இன்ப துன்பங்களாக நிர்ணயிக்கப்படுகிறது. நமக்கு வேறாக இருப்பதை நாம் அதிகம் விரும்புகின்றோம். அவைகளில், சம்பந்தம் வைக்க அதிகம் ஆசைப்படுகின்றோம்.

அதாவது, நம்முடையது என்று நாம் அபிமானிக்கும் மனைவி, மக்கள், சொத்து போன்றவற்றில் நமக்கு சம்பந்தம் இருக்கிறது. அதனால்தான் நமக்கு இவைகள் அனைத்தும் விரும்பத்தகுந்தவையாக இருக்கின்றது.

அதாவது, எந்த விகாரமும் அற்ற நிர்விகார சாட்சி சைதன்யத்தைதான் எல்லாவற்றையும் விட உண்மையில் நாம் விரும்புகிறோம். எனவே, "**அதுதான் நான்**" என்று உறுதியாக அறிந்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக, நாம் எல்லோரும் நான் இல்லாமல் போகக்கூடாது, என்றென்றும் நலமுடன் இருந்துக் கொண்டு இருக்க வேண்டும் என்றெல்லாம் நினைப்பது, ஒருவன் தன்னை முழுமையாக, எந்தவித நிபந்தனையில்லாமல் நேசிப்பதைக் காட்டுகிறது. இப்படிபட்ட "**ஆத்மாவே நான்**" என்று நிச்சயம் செய்துக் கொள்ள வேண்டும்.

எது சாட்சி ஸ்வரூபமாக இருக்கிறதோ? அதுவே சாட்சி சைதன்யம், இது அந்தகரணத்தையும், அதிலெழுகின்ற எண்ணங்களையும் பிரகாசிக்கிறது. அந்தக்கரணத்தில் பிரதிபலிக்கின்ற **சிதாபாஸன்** பிரபஞ்சத்தை பிரகாசிக்கிறது.

இதுதான் **த்வம்** (நான்) என்ற சொல் குறிக்கின்ற இலட்சியார்த்தம் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

சாட்சி சைதன்யமானது அந்தகரணத்தை அறிதல் என்ற தன்மையானது, எந்தவொரு மாற்றத்திற்கும் உட்படாமல், மனதின் வாயிலாக அறிபவன் என்பவனாக அனைத்தையும் அறிகின்றது என்றாலும், உண்மையில் இங்கு அறிபவனாக **மனம்** மட்டுமே இருக்கிறது. **சாட்சி அறிபவனும் அல்ல! அறியப்படும் பொருளும் அல்ல!** அது வெறும் சுயம்பிரகாசத்தை மட்டும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இதை எப்படி புரிந்துக் கொள்ளலாம் என்றால், வைரக்கல் மற்றும் அதன் பிரகாசம் இரண்டும் ஒன்றே. இந்த இரண்டையும் பிரிக்க முடியாது. காரணம் ஒளிப்பிரகாசம் இல்லையெனில், அது வைரமே இல்லை.

அதுப்போல, பரமனும், அதன் ஆற்றலும் ஒன்றே! அதாவது, பரமனாகிய சாட்சி சைதன்யம் மனம் எனும் ஊடகம் மூலம் அனைத்தையும் அறிபவனாக பிரகாசிக்கின்றது என்றாலும், அந்த பரமன் எதிலும் சம்பந்தப்படவில்லை.

ஆக, தேகம், புலன்கள், மனம், பிராணன், புத்தி, அகங்காரம் இவைகளிலிருந்து வேறுபட்டதாக மட்டுமே சாட்சி

சைதன்யம் இருக்கிறது. இத்தகைய ஆறு விதமான மாறுதல்களும், அவைகளுடன் சம்பந்தப்படாமலும், தன்னில் தானாய் தனித்து மட்டுமே சாட்சி சைதன்யம் நிற்கின்றது. அப்படிப்பட்ட இந்த சாட்சி **த்வம் (நான்)** என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. இவ்விதம் **த்வம் (நான்)** என்ற சொல்லின் பொருளை மேற்கூறியபடி நிச்சயம் செய்துக்கொள்ள வேண்டும்.

இனி **"தத்" (அது)** என்ற சொல்லின் பொருளை விசாரம் செய்ய வேண்டும். இல்லாததை நீக்குதல் மூலமாகவோ, விதிமுகமாகவும், நேரடியாகவும் இந்த சொல்லின் பொருள் இனி விளக்கப்படுகிறது.

பரமன் எந்த விதமான சம்சாரம் என்கின்ற தோஷங்கள் இல்லாமல், பருப்பொருளாக இருக்கும் ஸ்தூல தன்மையற்றதாக நிலையில் மட்டுமே இருக்கிறது. புலன்களால், மனதினால் அறியப்பட முடியாத நிலையில் நிர்குண ஸ்வரூபமாக இருக்கிறது. அறியாமையெனும் அழுக்கு அறவே இல்லாதது. இவையெல்லாம் பரமனின் இலட்சணமாக கூறப்பட்டிருக்கிறது.

எது ஏற்றத்தாழ்வுகளற்ற, பூரணமான ஆனந்த ஸ்வரூபமாக இருக்கின்றதோ? எது என்றும் அழியாத ஞான ஸ்வரூபமாகவும், எப்போதும் இருக்கின்ற **இருப்பு** என்ற தன்மையுடையதாகவும், தேசம், காலம், வஸ்து இவைகளால்

வரையறுக்கப்படாதாகவும் இருக்கின்றதோ? இதையே (பரமன் – ப்ரஹ்மம்) என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தகைய பரமனிடமிருந்து வெளிப்பட்ட சக்தியானது "**ஈஸ்வரன்**" எனப்படுகின்றது. அந்த ஈஸ்வரன் அனைத்தையும் அறிந்தவர் (ஸர்வக்ஞன்), அனைத்தையும் ஆள்பவர், அனைத்துக்கும் தலைவராக இருப்பவர், எல்லாவிதமான சக்திகளையும் பூரணமாக கொண்டிருப்பவர். இந்த ஈஸ்வரன் என்பவரே இந்த பிரபஞ்சமாக விரிவதால், இவரைத்தான் "**மாயை**" என்று சாஸ்திரம் அழைக்கின்றது. அத்தகைய ஈஸ்வரனாகிய மாயையுடன் கூடிய பரமன் (பிரம்மம்) இந்த உலகமாக இருக்கின்றது என்று அறிந்துக் கொள்ள வேண்டும்.

அதாவது, கயிற்றில் தெரியும் பாம்பு என்பது, கயிறு இருப்பதினால் மட்டுமே இருக்கின்றது. அதாவது, அந்த கயிற்றின் அதிர்ஷ்டானத்தின் மூலம் பாம்பு என்ற மாயத் தோற்றம், அதே கயிற்றின்மீது ஏற்றி வைக்கப்பட்டு, பாம்பாகத் தோன்றுகின்றது.

அதுப்போல, பரமனில் தெரியும் உலகம் என்பது, பரமன் இருப்பதினால் மட்டுமே இருக்கின்றது. அதாவது, பரமன் எனும் அதிர்ஷ்டானத்தின் மூலம் இந்த உலகம் எனும் மாயத்தோற்றம்,

அதே பரமனின் (அறிவின்) மீது ஏற்றி வைக்கப்பட்டு, இந்த உலகமாகத் தோன்றுகின்றது.

அது பாம்பல்ல, கயிறுதான் என்று அறிய அதற்கு அறிவு மட்டுமே போதும், செயல் எதுவும் அங்கு தேவையில்லை. அதுப்போல, இது உலகம் அல்ல பரமன் தான் என்று **அறிய மகா வாக்கிய விசாரம்** என்ற ஞானம் (அறிவு) மட்டுமே போதும். இதற்கான பயிற்சிகள் (தியானம், வாசி) ஏதும் தேவையில்லை.

அதாவது, இந்த உலகமாகத் தெரியும் அனைத்தும், அந்த பரமனின் (அறிவின் அதிர்ஷ்டானத்தில்) மனமாக ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்று அறியும்போது, பஞ்சபூதங்களால் ஆன உலகம் மறைந்து, பரமன் மட்டுமே தெரிகின்றது.

**'மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தில் மறைந்தது மாமத யானை!**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே!' –** திருமந்திரம்.

மரமாகப் பார்த்தால் யானை தெரியாது, யானையாக மட்டும் பார்த்தால், மரம் தெரியாது. அதுப்போல, இந்த உலகமாகப் பார்த்தால் பரம் தெரியாது, பரமனாகப் பார்த்தால், உலகம் தெரியாது.

ஆக, எந்தவொன்றை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகின்றதோ? **அதுவே பரமன்** என்பதாக அறிந்துக் கொள்வாயாக.

**ப்ரஹ்மம் சத்தியம்! ஜகத் மித்யா!** என்ற மகா வக்கிய விசாரம் மூலமும், இந்த ஜகத்தை (உலகத்தை) பிரம்மத்தின் காரியம் என்று கூறி, பரமனின் பூரணத்துவத்தை, மேலும், அதன் அத்வைத தன்மையை உறுதி செய்யப்படுகின்றது.

எந்தவொன்றை முமுக்ஷுக்களால் அறியதக்கதாக எல்லா உபநிஷத்துக்களிலும் கூறப்படுகின்றதோ? அதை பிரம்மன் (பரமன்) என்று தெரிந்துக் கொள்.

அதுதான் அதிக முயற்சி எடுத்துக் கொண்டு தேடத்தக்கது. எந்தவொன்றை சாதன–சதுஷ்டய சம்பத்தை அதிக முயற்சியுடன் அடைந்து பிறகு நாடப்படுகின்றதோ? அதையே பிரம்மன் என்று அறிந்து கொள்.

எந்தவொன்று ஜீவாத்மாவாக (மனமாக) உடலுக்குள் நுழைந்து, பிறகு அதனை செயல்படுத்தி கொண்டிருக்கும் தலைவனாக (அறிவாக) இருந்து கொண்டிருக்கிறதோ? அதை ஸ்ருதி (உபநிஷதங்கள்) இவ்வாறு விளக்குகின்றது.

## **<u>ஜீவ ஈஸ்வர ஐக்கியம்</u>**

ஈஸ்வரன் கர்மத்தின் பலனைக் கொடுப்பவராக, கர்மபல தாதாவாக உபநிஷத்தின் உபதேசங்கள் மூலமாக அறிந்துக் கொள்ள வேண்டும்.

ஜீவர்களை (மனங்களை) பரு உடலில் செயல்படுத்திக் கொண்டிருக்கிற மகா சக்தியாகவும், பரமன் (ஈஸ்வரனாக) இருக்கிறது. ஜடமான ஜீவன் (மனம்) செயல்படுகின்ற தத்துவமாக இருப்பதற்கு காரணமாக இருப்பது பரமன் (அறிவு – பிரம்மம்) என்பதை தெளிவாக அறிந்துக் கொள்.

"**தத்வமஸி**" போன்ற மகாவாக்கியங்கள் ஜீவ–ஈஸ்வர ஐக்கியத்தை விளக்குகின்ற விஷயத்தில் "**தத்**", "**த்வம்**" எனும் இரண்டு சொற்கள் குறிக்கின்ற இலட்சியார்த்தத்தை எடுத்துக் கொண்டுதான் உபதேசிக்கபடுகின்றது.

மகாவாக்கியமானது அதனுடைய உண்மைப் பொருளை உபதேசிப்பதற்காக அதில் இருக்கின்ற இரண்டு சொற்கள் குறிக்கும் வாக்யார்தத்தை விட்டுவிட்டு, அவைகளில் ஏற்றிவைக்கப்படுகின்ற உபாதிகளை நீக்கி விட்டு எப்படி உபதேசிக்கிறதோ? அவ்விதம் இங்கு மிகக் கவனத்துடன் விளக்கப்பட்டது.

வட நூல் வல்லுனர்கள் கூறுகின்ற **ஜீவன், ஈஸ்வரன்** என்ற வாக்கியத்தில் வாக்கிய அர்த்தம் பொருந்தாமல் விரோதமானால், அதன் உண்மைப் பொருள் அறியும் வண்ணம், இலக்கண விதிப்படி, இலட்சணா வாக்கியத்தில் இங்கு பொருள் கூறப்படுகின்றது.

அது எப்படியெனில், **"விட்ட இலட்சணை", "விடாத இலட்சணை", "விட்டுவிடாத இலட்சணை"** என மூன்று பெயர்களில் வருகின்ற வாக்கிய விருத்திகளின் மூலம் விளக்கப்படுகின்றது.

இதில் **இலக்கணம்** என்றாலும் **இலட்சணம்** என்றாலும் ஒன்றே. அதுப்போலவே, **இலக்கியம்** என்றாலும், **இலட்சியம்** என்றாலும் ஒன்றேயாகும்.

உதாரணமாக, (1) கங்கையில் ஒரு கிராமம் உள்ளது என்றும், அங்கு (2) கருப்பு நிற்கின்றது, சிகப்பு ஓடுகின்றது என்றும், (3) அவன் ராமசாமி என்றும் கூறப்படுகின்றது.

மேற்படி கூறப்பட்ட மூன்று வாக்கியங்களை இங்கு எடுத்துக்கொண்டு, வேதாந்த சாஸ்திரத்திற்கு விரோதமான வாக்கியங்களை எல்லாம் இந்த மூன்று இலட்சணைகளைக் கொண்டு ஆராய்ந்தால், அதன் பொருள் தெளிவாக விளங்கும்.

அதாவது, மேற்கூறப்பட்ட இலக்கண விதியின்படி, நாம் சாதாரணமாக ஒரு வார்த்தையை பேசும் பொழுது, அந்த வார்த்தையின் பொருளைக் கேட்டவுடன் அதன் நேரடியான பொருளைத்தான் முதலில் எடுத்துக் கொள்ள முயல்வோம்.

அந்த வார்த்தையினுடைய முழு அர்த்தத்தை அப்படியே விட்டு விட்டு, புதியதாக வேறு ஒரு பொருளை எடுத்துக் கொண்டால் அது "**விட்ட இலட்சணை**" எனப்படும்.

கங்கையில் ஒரு கிராமம் உள்ளது என்ற வாக்கிய அர்த்தத்தில் பார்க்கும்போது, ஓடுகின்ற கங்கை நதியின்மீது ஒரு கிராமம் இருக்க முடியாது. இதன் நேரடிப்பொருள் அதன் வாக்கியார்த்தமான கரை என்பதை விட்டு கூறப்பட்டுள்ளது.

அதாவது, கங்கைக் கரையில் ஒரு கிராமம் உள்ளது என்பது மட்டுமே, இதன் உண்மைப் பொருள். இதையே "**விட்ட இலட்சணை**" என்கின்றோம்.

அடுத்து, ஒரு வார்த்தையின் வாக்கிய அர்த்தத்தை விடாமல், வாக்கியார்த்தத்தை அவ்விதமே வைத்துக்கொண்டு, அந்த வாக்கியார்த்தத்துடன் இன்னும் சில வாக்கியங்களையும் சேர்த்துக் கொள்கின்றோம். இது "**விடாத இலட்சணை**" எனப்படும்.

**"கறுப்பு நிற்கிறது! சிகப்பு ஓடுகிறது!"** என்பதன் வாக்கிய அர்த்தம், கறுப்பு நிறம் தங்கி இருக்க, சிவப்பு நிறம் ஓடுகிறது என்ற வாக்கியத்தில் முழுமையான பொருள் இல்லை.

இதில், **கறுப்பு சிவப்பு** என்ற நிறங்களின் பதங்களுடன் அவற்றின் சம்பந்தமான **கருப்பு நிற பசுவையும், சிவப்பு நிற பசுவையும்** உணர்த்துவதாக பொருள் கொள்ள வேண்டும்.

அதாவது, கருப்பு நிற பசு நின்றுக் கொண்டிருக்க, சிவப்பு நிற பசு ஓடுகின்றது என்பது இதன் உண்மைப் பொருள்.

அதாவது, வாக்கியார்த்தத்துடன் இனியொன்றை சேர்த்துக் கொள்வது **"விடாத இலட்சணை"** என்கின்றோம்.

அடுத்து, வாக்கியார்த்தத்தை விடாமல், வேறு ஒரு அர்த்தம் வாக்கியார்த்தத்துடன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது அதை, **"விட்டு விடாத இலட்சணை"** என்கிறோம்.

(**சோயம்** = சஹ + அயம்.)

**இதனை அவன், இவன்** என்று பொருள் கொள்ளலாம்.

அவன், இவன் என்பதில் ராமசாமி என்பவனை முன்பு ஒருமுறை வேறு ஒரு இடத்தில் பார்த்தேன், அவ்வாறு அந்தக்காலத்தில் பார்த்த ராமசாமியான அவனும், இப்போது பார்க்கும் ராமசாமி என்ற இவனும் ஒன்றே என்பது பொருந்தாது.

*{அதாவது, இருபது வருஷங்களுக்கு முன் அவரது சொந்த கிராமத்தில் பார்த்த ராமசாமியை இப்போது நான் சென்னையில் பார்க்கிறேன். அவனேதான் இவன் என்றாலும், உண்மையில் அவன்தானா? என்றால் இல்லை.*

*அதற்குக்காரணம், அப்போது, இவனுக்கு 5 வயது மட்டுமே இருந்தது. இப்போது 20 வயது அதிகம் ஆகிவிட்டது. முன்புபோல, குழந்தையாக அவன் இல்லை. ஆனால், அவன் இன்னும் வளர்ந்து, புத்திசாலியாகி விட்டான். இருந்தாலும் அவனே இவன் என்பதை ஏற்கின்றோம்.}*

அதாவது, அவனது வயதைக் கொண்டு, அவனது குழந்தைப் பருவம் மற்றும் தற்போதுள்ள இளமைப் பருவம் என்பதை வைத்து, இதில் பாதியை விட்டு விட்டு, பாதியை வைத்துக் கொள்கின்றோம். அது **"விட்டு விடாத லட்சணை"** எனப்படும். அதாவது, விட்டும் விடுகின்றோம், விடாமல் வைத்தும் கொள்கின்றோம்.

அதாவது, நம்மிடம் **ஈஸ்வரன், ஜீவன் (தத், த்வம்)** என்ற இரண்டு தத்துவங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு தத்துவங்களின் வாக்கிய அர்த்தத்தை விட்டு விட்டு, இலட்சிய அர்த்தத்திற்கு போக வேண்டும்.

இதில், இந்த மூன்று விதமான இலட்சிய அர்த்தத்தில் ஒவ்வொரு இலட்சணையாகக் காணலாம்.

எப்படியென்றால், ஒவ்வொரு ஜீவனையும் நாம் **ஆத்மா, அனாத்மா** என்று இரண்டாக பிரித்துள்ளோம். ஆத்மா என்றால் அறிகின்ற **அறிவு ஸ்வரூபம்**. அனாத்மா என்றால், பஞ்சகோஷங்கள் கொண்ட ஜீவனை இரண்டு கூறாக மனதிற்குள் பிரித்து வைத்துள்ளோம்.

அதுப்போல, ஈஸ்வரனையும் இரண்டாகப் பிரித்து வைத்துள்ளோம். **சத்தியம், ஞானம், அனந்தம்** என்ற பிரம்மம் ஆகவும், பிறகு இந்த ஜகத்திற்கே காரணமாக இருக்கின்ற **மாயை என்ற ஈஸ்வரனாகவும்** இரண்டாகப் பிரித்து வைத்துள்ளோம். அதாவது, **பிரம்மும், மாயையும்** சேர்ந்தது ஈஸ்வரன். இங்கு ஜீவனையும், ஈஸ்வரனையும் இணைக்க வேண்டுமென்றால், இங்கு **"விட்ட இலட்சணை"** சரியாக வராது. காரணம், ஜீவனிடத்திலுள்ள அனைத்தையும் விட்டுவிட முடியாது.

ஏனெனில், ஜீவனிடத்தில் என்றும் அழியாத நித்தியமான ஒரு சைதன்யம் இருக்கின்றது. அதனால், விட்ட இலட்சணை சரியாக இருக்காது.

பிறகு "**விடாத இலட்சணை**" – யை எடுத்துக் கொள்ளலாமா? என்றால், ஜீவனிடம் ஏற்கனவே சம்ஸாரத்தைக் கொடுக்கின்ற பஞ்ச கோஷங்கள் இருக்கின்றன. அந்த பஞ்சகோஷங்கள் இருக்கின்ற வரைக்கும் ஈஸ்வரனுடன் இணைய முடியாது. ஆகவே, ஜீவனிடம் இருக்கின்ற எல்லா தன்மை களையும் விட்டு விட்டு, புதியதாக எதை ஒன்றையும் சேர்க்க முடியாது. எனவே, "**விடாத இலட்சணை**" – யும் இங்கு சரியாக இருக்க முடியாது.

தற்பொழுது, "**விட்டும், விடாத இலட்சணை**" – யை மட்டும் எடுத்துக்கொண்டால் சரியாக வரும். இது எப்படியெனில், ஜீவனிடம் ஒரு பகுதியை வைத்துக் கொள்கின்றோம், ஒரு பகுதியை விட்டு விடுகின்றோம். இதில், ஆத்மாவாகிய சைதன்ய அம்ஸத்தை மட்டும் வைத்துக் கொண்டு, அனாத்மாவான பஞ்சகோஷங்களை விட்டு விடுகின்றோம். இங்கு ஒன்றை விட்டு, ஒன்றை விடாமல் வைத்துக் கொள்வதால் "**விட்டும், விடாத இலட்சணை**" என்பது சரியாக இருக்கும்.

அதுப்போல, ஈஸ்வரனிடத்தில் **மாயை – யை** (ஜகத்தை) விட்டு விடுகின்றோம். அந்த **சைதன்யத்தை** மட்டும் வைத்துக் கொள்கின்றோம். இவ்வாறு, ஜீவனிடமும், ஈஸ்வரனிடமும் விட்டும் விடாத இலட்சணையைக் கையாண்டால்தான் ஜீவனிடம் உள்ள சைதன்யம் நமக்கு கிடைக்கும், ஈஸ்வரனிடத்திலும் உள்ள சைதன்யம் நமக்கு கிடைக்கும்.

ஆதலால், ஜீவனிடமும், ஈஸ்வரனிடமும் உபாதியானது நீக்கப்பட வேண்டி இருப்பதினால், இந்த **"விட்டும், விடாத இலட்சணை"** – யின் மூலமாகத்தான் ஜீவனிடமும், ஈஸ்வரனிடமும் நாம் அணுகவேண்டும். அந்த இருவருக்கும் இடையில் அத்வைதத்தை தத்துவத்தை நிலை நாட்ட வேண்டுமென்றால், பிளவுபடாத ஒன்றாக இருக்கின்ற சைதன்ய அம்சத்திற்காக நாம் இலக்ஷ்சணையினால் அணுகவேண்டும்.

அது **"விட்ட இலட்சணை"**யினால் முடியாது. அதுபோல, **"விடாத இலட்சணை"**யினாலும் முடியாது. ஆனால், **"விட்டும், விடாத இலட்சணை"**யினால் மட்டும்தான் நாம் செய்ய முடியும். இப்பொழுது **ஜீவன் – ஈஸ்வரன்** இரண்டும் ஐக்கியமாகும் என்று நம்மால் கூற இயலும்.

––– oooOOOooo –––

# வாக்கிய விருத்தி விசாரம்

(ஜீவ - ஈஸ்வர ஐக்கியம்)



ப்ரக்ஞன்